(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

FWC

**இணைந்த கணிதம் – A**
**Combined mathematics – A**

**Three Hours**

**Gr -12 (2023)**

**10 T A**

சுட்டெண்

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி A இன் எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக. ஒவ்வொரு வினாவுக்கும் விடைகளைத் தரப்பட்ட இடத்தில் எழுதுக. மேலதிக இடம் தேவைப்படுமெனின், நீர் மேலதிகத் தாள்களைப் பயன்படுத்தலாம்.
- பகுதி B இல் உள்ள 7 வினாக்களில் விரும்பிய 5 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்ததும் பகுதி A ஆனது பகுதி B யிற்கு மேலே இருக்கக் கூடியதாக இரு பகுதிகளையும் இணைத்துப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க.
- வினாத்தாளின் பகுதி B யை மாத்திரம் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

| இணைந்த கணிதம் I | | |
|---|---|---|
| பகுதி | வினா எண் | கிடைத்த புள்ளிகள் |
| A | 1 | |
| | 2 | |
| | 3 | |
| | 4 | |
| | 5 | |
| | 6 | |
| | 7 | |
| | 8 | |
| | 9 | |
| | 10 | |
| B | 11 | |
| | 12 | |
| | 13 | |
| | 14 | |
| | 15 | |
| | 16 | |
| | 17 | |
| வினாத்தாள் I இன் மொத்தம் | | |

| | |
|---|---|
| இணைந்த கணிதம் I | |
| இணைந்த கணிதம் II | |
| இறுதிப் புள்ளிகள் | |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# பகுதி A

1. $\frac{3x}{(x-1)(x+2)}$ ஐப் பகுதிப்பின்னங்களில் எடுத்துரைக்க. **இதிலிருந்து** $\frac{3}{(x-1)(2x+1)}$ ஐயும் பகுதிப்பின்னங்களில் எடுத்துரைக்க.

2. ஒரே வரிப்படத்தில் $y = |3x - 2|$, $y = 2x$ ஆகியவற்றின் வரைபுகளைப் பரும்படியாக வரைக. **இதிலிருந்து அல்லது வேறு விதமாக,** சமனிலி $3|x - 2| \leq 2x$ ஐத் திருப்தியாக்கும் $x$ இன் எல்லா மெய்ப் பெறுமானங்களையும் காண்க.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

3. $\lim_{x\to\frac{\pi}{2}}\frac{\sqrt{3}-\sqrt{2+\sin x}}{\left(\frac{\pi}{2}-x\right)\cos x}=\frac{1}{4\sqrt{3}}$ எனக் காட்டுக.


4. ஒரு வளையி $C$ ஆனது $0<\theta<\frac{\pi}{2}$ இற்கு $x=4\sin 2\theta$ , $y=2+\cos 4\theta$ என்னும் பரமானச் சமன்பாடுகளினால் தரப்படுகின்றது. $\frac{dy}{dx}=-\sin 2\theta$ எனக் காட்டுக. $\theta=\frac{\pi}{8}$ இல் வளையி $C$ இற்கு வரையப்பட்ட தொடலிக் கோட்டின் சமன்பாடு $x+\sqrt{2}y-4\sqrt{2}=0$ எனக் காட்டுக.

5. $0 \leq \theta \leq \pi$ இற்கு சமன்பாடு $(2\sin\theta - \cos\theta)(1 + \cos\theta) = \sin^2\theta$ ஐத் தீர்க்குக.

6. கிடைத்தரையில் இருந்து புவியீர்ப்பின் கீழ் நிலைக்குத்தாக மேல் நோக்கி $\sqrt{2gh}$ வேகத்துடன் துணிக்கை ஒன்று எறியப்படும் கணத்தில் கிடைத் தரையில் இருந்து $h$ உயரத்தில் உள்ள புள்ளியில் இருந்து புவியீர்ப்பின் கீழ் ஓய்வில் இருந்து ஒரு துணிக்கை விழவிடப்படுகின்றது இரு துணிக்கைகளின் கதிகள் சமனாவதற்கு எடுக்கும் நேரத்தை காண்க. அப்போது அவை ஒன்றை ஒன்று சந்திக்கும் என உய்த்தறிக.

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

7. கிடைத்தரையில் இருந்து $a$ உயரமான புள்ளியில் இருந்து கிடையுடன் $30^0$ திசையில் மேல் நோக்கி $u$ வேகத்துடன் எறியப்படும் துணிக்கை கிடைத்தரையை $\sqrt{3ag}$ கதியில் அடிப்பின் துணிக்கையின் எறியல் கதி $\sqrt{ag}$ எனக் காட்டுக. துணிக்கை தரையை அடிக்கும் திசையைக் காண்க.

8. 


ஒரு இலேசான நீளா இழையின் நுனிகளுக்கு $P, Q$ ஆகிய துணிக்கைகள் இணைக்கப்பட்டு படத்தில் காட்டப்பட்டவாறு ஒரு ஒப்பமான இலேசான கப்பியின் மேலாக இழையானது சென்று இறுக்கமாகவும் கப்பியுடன் தொடுகையுறாத இழையின் பகுதிகள் நிலைக்குத்தாகவும் இருக்க தொகுதி ஓய்வில் இருநத விடப்படுகின்றது. $P, Q$ ஆகிய துணிக்கைகளின் திணிவுகளுக்கிடையிலான விகிதம் $2:3$ ஆகவும் இழையில் உள்ள இழுவை $24mg$ ஆகவும் இருப்பின் துணிக்கைகளின் ஆர்முடுகலையும் அவற்றின் திணிவுகளையும் காண்க.

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

9. புள்ளி $O$ குறித்து தளம் ஒன்றில் $A$ , $B$ ஆகிய புள்ளிகளின் தானக் காவிகள் முறையே $2\underline{a}$ , $3\underline{b}$ ஆகும். நேர்கோடு $AB$இல் உள்ள எந்த ஒரு புள்ளி $C$ இன் தானக்காவி ஆனது $3\alpha\underline{b} + 2(1-\alpha)\underline{a}$ என்னும் வடிவில் எடுத்துரைக்கப்படலாம் எனக் காட்டுக. $|\underline{a}| = 3$ , $|\underline{b}| = 2$ எனில் $OC$ செங்குத்து $AB$ ஆகுமாறு $AB$ இல் உள்ள புள்ளி $C$ இன் தானக்காவியை குற்றுப்பெருக்கத்தை பயன்படுத்திக் காண்க.

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

10. W நிறையும் $4a$ நீளமும் உடைய ஒரு சீரான கோல் $AB$இன் ஒரு முனை $A$ஆனது ஒரு ஒப்பமான நிலைக்குத்து சுவரை தொட்டுக்கொண்டும் $AC : CB = 1:3$ ஆகுமாறு கோலில் உள்ள புள்ளி $C$ இற்கு ஒரு இலேசான நீளா இழையின் ஒரு நுனி இணைக்கப்பட்டு இழையின் மறு நுனி $A$ இற்கு மேலே சுவரில் உ்ள்ள புள்ளி $D$ இற்கு இணைக்கப்பட்டும் கோலானது சமனிலையில் உள்ள போது இழையில் உள்ள இழுவை $2W$ எனில் சுவரினால் கோலில் ஏற்படுத்தப்படும் மறுதாக்கம், கோல் கிடையுடன் ஆக்கும் கோணம், இழையின் நீளம் ஆகியவற்றைக் காண்க.

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

FWC

**இணைந்த கணிதம் – B**
**Combined mathematics – B**

**Gr -12 (2023)** | **10** | **T** | **B**

11. (a) $f(x) = x^2 + (2k+1)x + 2k - 5$ எனக் கொள்வோம்; இங்கு $k \in \mathbb{R}$.

$f(x) = 0$ இன் பிரித்துக்காட்டியை $k$ சார்பில் எழுதுக. **இதிலிருந்து,** சமன்பாடு $f(x) = 0$ இற்கு வேறுவேறான மெய்ம் மூலங்கள் இருக்கின்றதெனக் காட்டுக.

$f(x) = 0$ இன் மூலங்கள் $\alpha,\ \beta$ எனவும் கொள்வோம். $\alpha + \beta,\ \alpha\beta$ ஆகியவற்றை $k$ சார்பில் எழுதுக. $\alpha, \beta$ ஆகிய இரண்டும் மறையாக இருக்குமாறு $k$ இன் பெறுமானங்களைக் காண்க.

இப்போது $k > 3$ எனக் கொள்வோம். $\sqrt{\frac{\alpha}{\beta}},\ \sqrt{\frac{\beta}{\alpha}}$ ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட இருபடிச் சமன்பாட்டை $k$ சார்பில் காண்க.

**இதிலிருந்து,** $f\left(-\frac{2}{x}\right) = 0$ இன் மூலங்கள் $\gamma,\ \delta$ எனின், $\sqrt{\frac{2\gamma}{\delta}},\ \sqrt{\frac{2\delta}{\gamma}}$ ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட இருபடிச் சமன்பாட்டை $k$ சார்பில் காண்க.

(b) $f(x) = 3x^3 + ax^2 + x + b$ எனவும் $g(x) = x^3 + cx^2 + ax + 1$ எனவும் கொள்வோம்; இங்கு $a, b, c \in \mathbb{R}$ ஆகும். $f(x)$ ஆனது $x + 1$ இனால் வகுக்கப்படும்போது மீதி $1$ எனவும் $g(x)$ ஆனது $x^2 + x - 2$ இனால் வகுக்கப்படும்போது மீதி $2x + 5$ எனவும் தரப்பட்டுள்ளன. $a,\ b,\ c$ ஆகியவற்றின் பெறுமானங்களைக் காண்க.

மேலும் $a,\ b,\ c$ ஆகியவற்றுக்கான இப்பெறுமானங்களுடன் எல்லா $x \in \mathbb{R}$ இற்கும் $3g(x) - f(x) \geq -\frac{25}{28}$ எனக் காட்டுக.

12. (a) $x \neq 0$ இற்கு $f(x) = \frac{(x+2)(x-1)}{x^2}$ எனக் கொள்வோம்.

$x \neq 0$ இற்கு $f(x)$ இன் பெறுதி $f'(x)$ ஆனது $f'(x) = \frac{4-x}{x^3}$ இனால் தரப்படுகின்றது எனக் காட்டுக.

**இதிலிருந்து,** $f(x)$ அதிகரிக்கும் ஆயிடையையும் குறைகின்ற ஆயிடைகளையும் காண்க. மேலும் $f(x)$ இன் திரும்பற் புள்ளியின் ஆள்கூறுகளையும் காண்க.

$x \neq 0$ இற்கு $f(x)$ இன் இரண்டாம் பெறுதி $f''(x)$ ஆனது $f''(x) = \frac{2(x-6)}{x^4}$ எனத் தரப்பட்டுள்ளது. $y = f(x)$ இன் வரைபின் விபத்திப் புள்ளியின் ஆள்கூறுகளைக் காண்க.

$y = f(x)$ இன் வரைபை அச்சை வெட்டும் புள்ளிகள், அணுகுகோடுகள், திரும்பற் புள்ளி, விபத்திப் புள்ளி ஆகியவற்றைக் காட்டிப் பரும்படியாக வரைக.

(b) $ABCD$ என்பது ஒரு செவ்வகமாகும். மீற்றரில் அளக்கப்படும் அதன் பக்கங்களின் நீளங்கள் $AB = a$, $BC = b$ இனால் தரப்பட்டுள்ளன. பக்கம் $CD$ மீது $P$ என்னும் புள்ளி உள்ளது. $PA^2 + PB^2$ ஆனது குறைந்தபட்சமாக இருப்பதற்கு $P$ ஆனது $CD$ யின் நடுப்புள்ளியாக இருக்க வேண்டும் எனக் காட்டுக.

13. புள்ளி $P \equiv (x_1,\ y_1)$ இலிருந்து, நேர்கோடு $l \equiv ax + by + c = 0$ இற்குள்ள செங்குத்துத் தூரம் $\frac{|ax_1+by_1+c|}{\sqrt{a^2+b^2}}$ என்பதை நிறுவுக.

முக்கோணி $ABC$ இன் இரு உச்சிகள் $A \equiv (1, 5\ ),\ C \equiv (3, 4\ )$ ஆகும். பக்கம் $AB$ ஆனது $2x - 5y + 23 = 0$ என்னும் கோட்டின் மீது கிடக்கின்றது.

பக்கம் $AC$ யின் நீளத்தையும் $A, C$ இனூடு செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டையும் காண்க.

$A, B$ இனூடாகச் செல்லும் கோட்டின் மீதுள்ள புள்ளி எதனதும் ஆள்கூறுகள் $(5t + 1, 2t + 5)$ இனால் தரப்படுகின்றதெனக் காட்டுக.

முக்கோணி $ABC$ யின் பரப்பளவு $4\frac{1}{2}$ சதுர அலகுகள் எனவும் முக்கோணி முழுவதும் முதலாம் கால்வட்டத்தில் கிடக்கின்றது எனவும் மேலும் தரப்பட்டுள்ளன. உச்சி $B$ இலிருந்து $AC$ இற்கான செங்குத்துத் தூரத்தைக் கருதுவதன் மூலம் உச்சி $B$ யின் ஆள்கூறுகளைக் காண்க.

$B,\ C$ இனூடு செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டையும் காண்க.


14. (a) $\sin(A + B)$ இன் விரிவை எழுதுக. **இதிலிருந்து,** $\cos(A + B)$ இன் விரிவை பெறுக.

$A, B$ இற்குப் பொருத்தமான பெறுமானங்களை இடுவதன் மூலம் $\sin 2\theta = 2 \sin\theta \cos\theta$ எனவும் $\cos 2\theta = 2cos^2\theta - 1$ எனவும் காட்டுக. $\cos 3\theta = \cos(2\theta + \theta)$ என எழுதுவதன் மூலம் $\cos 3\theta = 4cos^3\theta - 3\cos\theta$ எனக் காட்டுக. இறுதியாகப் பெற்ற முடிவில் $\theta$ இற்குப் பொருத்தமான பெறுமானத்தை இடுவதன் மூலம் $\cos\frac{\pi}{12}$ என்பது சமன்பாடு $4\sqrt{2}x^3 - 3\sqrt{2}x - 1 = 0$ இன் ஒரு மூலம் எனக் காட்டுக.

$4\sqrt{2}x^3 - 3\sqrt{2}x - 1 = (\sqrt{2}x + 1)(4x^2 - 2\sqrt{2}x - 1)$ என்பதை வாய்ப்புப் பார்க்க. $\cos\frac{\pi}{12} = \frac{\sqrt{2}+\sqrt{6}}{4}$ என்பதை **உய்த்தறிக.**

(b) வழக்கமான குறிப்பீட்டில் ஒரு முக்கோணி $ABC$ இற்கு சைன் நெறியைக் கூறுக.

உருவில் காட்டப்பட்ட முக்கோணி $ABC$ இல் $AB$ யின் நடுப்புள்ளி $D$ ஆகும். $B\hat{A}C = B\hat{C}D = \beta$ உம் $B\hat{D}C = \alpha$ உம் ஆகும். முக்கோணிகள் $ACD,\ BCD$ ஆகியவற்றிற்கு சைன்



(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

நெறியைப் பிரயோகிப்பதன் மூலம் $\frac{\sin(\alpha+\beta)}{\sin\beta}=\frac{\sin\alpha}{\sin(\alpha-\beta)}$ எனக் காட்டுக. மேலும் $\tan^2\beta=\frac{\sin^2\alpha}{1+\cos^2\alpha}$ எனவும் காட்டுக.

(c) சமன்பாடு $\sin^{-1}\left(\frac{e^x}{5e^x-6}\right)+\cos^{-1}\left(\frac{1}{e^x}\right)=\frac{\pi}{2}$ ஐத் தீர்க்க.

15.a) தரைக்கு மேலே உயரம் $2a$ இல் உள்ள புள்ளி ஒன்றில் இருந்து கதி $2gT$ உடன் கிடையாக எறியப்படும் துணிக்கை புவியீர்ப்பின் கீழ் சுயாதீனமாக இயங்குகின்றது. இங்கு $T$ மாறிலி ஆகும். துணிக்கை தரையை அடிக்கும் வரைக்குமான துணிக்கையின் கிடை, நிலைக்குத்து இயக்கங்களுக்கான வேகநேர வரைபுகளை தனித்தனியாக வரைக. துணிக்கை தரையை அடிக்கும் போது எறியற் புள்ளியில் இருந்தான கிடைத்தூரம் $4gT^2$ எனில் வேக நேர வரைபுகளைப் பயன்படுத்தி

i) துணிக்கை தரையை அடிக்க எடுக்கும் நேரத்தை $T$ சார்பில் காண்க

ii) துணிக்கை தரையை அடிக்கும் வேகத்தைக் காண்க.

iii) $a$ ஐ $g,\ T$ சார்பில் காண்க.

b) ஒருகுறித்த கணத்தில் $A\,,B$ என்னும் கப்பல்கள் துறைமுகம் $H$ இல் இருந்து முறையே $12\ km$ மேற்கிலும் $4\sqrt{3}km$ வடக்கிலும் உள்ளன. கப்பல் $A$ஆனது $12km/h$ சீரான கதியுடன் கிழக்கு நோக்கியும் கப்பல் $B$ ஆனது $12\sqrt{3}km/h$ சீரான கதியுடன் தெற்கு நோக்கியும் ஒரே நேரத்தில் பயணிக்கின்றன.


$i$) சார்பு வேகக் கோட்பாட்டை பயன்படுத்தி வேக முக்கோணி வரைவதன் மூலம் $B$ சார்பாக $A$ இன் வேகத்தைக் காண்க.

$ii$) $B$ சார்பாக $A$ இன் பாதையை வரைக

$iii$) $A\,,B$ க்கு இடையிலான மிகக் கிட்டிய தூரத்தைக் காண்க.

$iv$) மிகக் கிட்டிய தூரத்தை அடைய எடுக்கும் நேரத்தைக் காண்க.

16)




உருவில் ABC ஆனது AC =BC ஆகுமாறும் $A\hat{C}B=60^0$ ஆகுமாறும் உள்ள $5m$ திணிவுள்ள ஓர் ஒப்பமான சீரான ஆப்பின் திணிவுமையத்தின் ஊடான நிலைக்குத்து குறுக்கு வெட்டாகும். $CA\,,CB$ என்பன அவற்றைக் கொண்டுள்ள முகங்களின் அதிஉயர் சரிவுக் கோடுகளாகும். முகம் $AB$ ஆனது ஒரு ஒப்பமான கிடை நிலத்தை தொட்டுக்கொண்டிருக்க முறையே $3m\,,m$ திணிவுள்ள $P,Q$ ஆகிய துணிக்கைகள் படத்தில் காட்டியவாறு ஒரு இலேசான நீளா இழையின் நுனிகளுக்கு இணைக்கப்பட்டு இழையானது

உச்சி $C$ இல் நிலைப்படுத்தப்பட்ட ஒப்பமான இலேசான கப்பியின் மேலாகச் சென்று இழை இறுக்கமாகவும் இழையின் பகுதிகள் அதி உயர் சரிவுக் கோடுகள் வழியே இருக்குமாறும் பிடிக்கப்பட்டு தொகுதி மெதுவாக விடுவிக்கப்படுகின்றது. தொடரும் இயக்கத்தில் ஒரு குறித்த கணத்தில் ஆப்பானது புள்ளி $O$ இல் இருந்து $x$ தூரத்திலும் துணிக்கை $P$ ஆனது $C$ இல் இருந்து அதிஉயர் சரிவுக்கோட்டின் வழியே $y$ தூரத்திலும் காணப்படின்.

$i$) ஆப்பு , துணிக்கைகளில் தாக்கும் விசைகளைக் குறிக்க.

$ii$) ஆப்பு , துணிக்கைகளின் ஆர்முடுகல்களை $\ddot{x}, \ddot{y}$ சார்பில் எழுதுக.

$iii$) ஆப்பின் ஆர்முடுகலின் பருமன் $\frac{\sqrt{3}}{16}g$ எனவும் துணிக்கை $P$ இன் ஆர்முடுகலின் பருமன் $\frac{\sqrt{201}}{32}g$ எனவும் காட்டுக.

$iv$) தரையினால் ஆப்பின் மீது தாக்கும் மறுதாக்கத்தின் பருமனைக் காண்க.

$v$) துணிக்கை $P, Q$ இன் மீது ஆப்பினால் கொடுக்கப்படும் மறுதாக்கங்களைக் காண்பதற்கான சமன்பாடுகளைப் பெறுக.

17.

a) i) $\underline{a}, \underline{b}$ என்பன பூச்சியமற்ற சமாந்தரமற்ற காவிகளாகவும் $\alpha\underline{a} + \beta\underline{b} = \underline{0}$ ஆகவும் இருப்பின் $\alpha = 0, \beta = 0$ எனக் காட்டுக

ii) புள்ளி O குறித்து A,B என்ற புள்ளிகளின் தானக்காவிகள் முறையே $2\underline{a}$ , $\underline{b} - \underline{a}$ ஆகும். $BM:MA = 1:2$ ஆகுமாறு AB இல் உள்ள புள்ளி $M$ ஆகும். OA இற்கு சமாந்தரமாக B ஊடாக வரையும் நேர்கோடு நீட்டிய OM ஐ C இல் சந்திக்கிறது. இங்கு $OM = \lambda OC$ ஆகும்

I. $\overrightarrow{AB}$ ஐ $\underline{a}, \underline{b}$ சார்பாக காண்க

II. $\overrightarrow{MB}$ ஐ $\underline{a}, \underline{b}$ சார்பாக காண்க

III. முக்கோண காவிக் கூட்டல் விதியை பயன்படுத்தி $\overrightarrow{OM}$ ஐ $\underline{a}, \underline{b}$ சார்பாக காண்க.

IV. $\overrightarrow{BC}$ ஐ யாதாயினும் பரமானம் $\mu, \underline{a}, \underline{b}$ எழுதுக.

V. $OM = \lambda OC$ ஐ பயன்படுத்தி $\overrightarrow{OM}$ ஐ $\lambda, \mu, \underline{a}, \underline{b}$ சார்பாக காண்க

VI. $III, V$ ஆகியவற்றை பயன்படுத்தி $\lambda, \mu$ என்பவற்றைக் காண்க

VII. C இன் தானக்காவி மற்றும் $\overrightarrow{BC}$ ஐ எழுதுக.

VIII. OM:MC ஐ உய்த்தறிக.

b) $ABCDEF$ ஆனது பக்க நீளம் $2a$ ஆகவுள்ள ஒழுங்கான அறுகோணி. $\overrightarrow{BC}$, $\overrightarrow{CD}, \overrightarrow{ED}, \overrightarrow{DB}, \overrightarrow{BE}$ என்பவற்றின் வழியே முறையே $4,8,2,\lambda\sqrt{3}, 6\ N$ விசைகள் தாக்குகின்றன. விளையுளானது $AD$ க்கு செங்குத்து எனில்

i. $\lambda$ ஐக் காண்க.

ii. விளையுளைக் காண்க.

iii. விளையுள் $E$ இனூடாக செல்லும் எனக் காட்டுக

iv. விளையுள் $D$ ஊடாக செல்வதற்கு சேர்க்கப்படவேண்டிய இணையைக் காண்க